©
GOVERNMENT OF TAMIL NADU
2026

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No.197/2009.
[Price: Rs. 6.40 Paise.

# தமிழ்நாடு அரசிதழ்

**சிறப்பு வெளியீடு** ஆணையின்படி வெளியிடப்பட்டது.

No. 88A] சென்னை, வெள்ளிக்கிழமை, பிப்ரவரி 20, 2026
மாசி 8, விசுவாவசு, திருவள்ளுவர் ஆண்டு-2057

## பகுதி IV—பிரிவு 1

### தமிழ்நாடு சட்டமுன்வடிவுகள்

**பொருளடக்கம்**

| | பக்கங்கள் |
|---|---|
| சட்டமுன்வடிவுகள்: | |
| எண். 11/2026.—தமிழ்நாடு நிதிநிலை நிருவாக பொறுப்புடைமை (திருத்தச்) சட்டம் .. .. .. | 2–4 |
| எண். 12/2026.—தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண். 2) சட்டம் .. .. .. .. .. | 5–10 |
| எண். 13/2026.—தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டம் .. .. .. | 11–16 |

**2026–ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 20–ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்கக் காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130–ஆம் விதியின் கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.**

## சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 11/2026

**2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதிநிலை நிருவாக பொறுப்புடைமைச் சட்டத்தை மேலும் திருத்தம் செய்வதற்கானதொரு சட்ட முன்வடிவு.**

இந்தியக் குடியரசின் எழுபத்து ஏழாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக: –

குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

1. (1) இந்தச் சட்டம், 2026 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதிநிலை நிருவாக பொறுப்புடைமை (திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது, உடனடியாக நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

4–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

தமிழ்நாடு சட்டம் 16/2003.

2. 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதிநிலை நிருவாக பொறுப்புடைமைச் சட்டத்தின் 4 ஆம் பிரிவின், (2) ஆம் உட்பிரிவில்,–

(i) (a) கூறில், "2026–2027" எனும் எண்ணுருக்காக, "2027–2028" எனும் எண்ணுருவானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(ii) (b) கூறில், "2026 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 31 ஆம் தேதி" எனும் சொற்றொடருக்காக, "2027 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 31 ஆம் தேதி" எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

**நோக்கக் காரண விளக்கவுரை**

எரிசக்தித் துறையில் குறிப்பிடப்பட்டுள்ள செயல்திறன் அளவுகோல்களைப் பூர்த்தி செய்வதற்கு உட்பட்டு, 2025–2026 ஆம் நிதியாண்டில், மாநிலங்களுக்கு, எரிசக்தித் துறையின் செயல்பாடுகளுடன் தொடர்புடைய வகையில், மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 3 விழுக்காடு நிகர கடன் உச்சவரம்பைத் தாண்டி, மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 0.50 விழுக்காடு வரை கூடுதல் வருடாந்திர கடன் உச்சவரம்புக்கான வழிகாட்டுதல்களை, இந்திய அரசு வெளியிட்டுள்ளது. அதன்படி, மாநிலங்களானது, 2025–2026 ஆம் ஆண்டிற்கான மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 3.50 விழுக்காடு நிதிப் பற்றாக்குறைக்கு அனுமதிக்கப்படும். இதில் 0.50 விழுக்காடானது எரிசக்தித் துறை சீர்திருத்தங்களுடன் சேர்த்திருத்தல் வேண்டும்.

2. மாநிலத்தை உயர்ந்த வளர்ச்சிப் பாதைக்கு கொண்டு செல்லும்பொருட்டு, கிடைக்கக்கூடிய அதிகபட்ச நிதி சார்ந்த வாய்ப்பை முழுமையாகப் பயன்படுத்துவது அவசியம் என அரசு கருதுகிறது, அதற்கிணங்கியவாறு, 2027–2028 ஆம் ஆண்டிற்குள் வருவாய் பற்றாக்குறையை நீக்குவதற்கும், 2027 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 31 ஆம் தேதிக்குள் நிதிப் பற்றாக்குறையை மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில், 3 விழுக்காடாக குறைப்பதற்கும், நிருணயிக்கப்பட்ட காலக்கெடுவை நீட்டிக்கும் வகையில், 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதிநிலை நிருவாக பொறுப்புடைமைச் சட்டத்தினை (தமிழ்நாடு சட்டம் 16/2003) திருத்தம் செய்வதென அரசானது முடிவு செய்துள்ளது.

3. இந்தச் சட்ட முன்வடிவானது மேற்சொன்ன முடிவிற்குச் செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

**தங்கம் தென்னரசு,**
*நிதி மற்றும் சுற்றுச்சூழல் & காலநிலை மாற்றத் துறை அமைச்சர்.*

தலைமைச் செயலகம்,
சென்னை–9,
2026 பிப்ரவரி 20.

கி. சீனிவாசன்,
*முதன்மைச் செயலாளர்.*

2026—ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 20—ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்கக் காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130-ஆம் விதியின் கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.

## சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 12/2026

**2025—ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1—ஆம் நாளில் தொடங்கிய நிதியாண்டின் பணிகளுக்காகவும், நோக்கங்களுக்காகவும், மாநிலத் தொகுநிதியத்திலிருந்து மேலும் குறிப்பிட்ட சில தொகைகளை ஒதுக்கீடு செய்ய வகை செய்வதற்கானதொரு சட்டமுன்வடிவு.**

இந்தியக் குடியரசின் எழுபத்து ஏழாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

1. இந்தச் சட்டம், 2026—ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண். 2) சட்டம் என வழங்கப்பெறும். குறுந்தலைப்பு.

2. மாநில அரசு, 2025—ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1—ஆம் நாளில் தொடங்கிய நிதியாண்டின் பணிகளுக்காகவும், நோக்கங்களுக்காகவும் தேவைப்படுகிற நாற்பத்து மூவாயிரத்து எண்பத்து இரண்டு கோடியே தொண்ணூற்றெட்டு இலட்சத்து அறுபத்து ஆறாயிரம் ரூபாய்க்கு மேற்படாத மேலுமானதொரு தொகையை— 2025—ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1—ஆம் நாளில் தொடங்கிய நிதியாண்டின் பணிகளுக்காகவும், நோக்கங்களுக்காகவும் மாநிலத் தொகுநிதியத்திலிருந்து துணை நிதி ஒதுக்கம் செய்தல்.

(a) இணைப்புப் பட்டியலின் (3)—ஆம் கலப்பத்தியில் (column) அறிவித்துள்ளவாறு, அந்த ஆண்டிற்காகத் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையால் அனுமதிக்கப்பட்ட துணை மானியங்களையும்;

(b) இணைப்புப் பட்டியலின் (4)—ஆம் கலப்பத்தியில் (column) அறிவித்துள்ளவாறு, அந்த ஆண்டிற்காக மாநிலத் தொகுநிதியத்திற்குச் சாட்டப்பட்ட துணைச் செலவினத்தையும்;

எதிர்கொள்வதற்காக மாநிலத் தொகுநிதியத்திலிருந்து ஒதுக்கீடு செய்யலாம்.

**இணைப்புப் பட்டியல்.**
(2—ஆம் பிரிவைக் காண்க).

| கோரிக்கை எண் | பணிகளும் நோக்கங்களும் | | கீழ்க்காணும் தொகைகளுக்கு மேற்படாமல் | | |
|---|---|---|---|---|---|
| | | | சட்டமன்றப் பேரவையால் வாக்களிக்கப்பட்டது | மாநிலத் தொகுநிதியத்திற்கு *சாட்டப்பட்டது* | மொத்தம் |
| (1) | (2) | | (3) | (4) | (5) |
| | | | (ரூ.) | (ரூ.) | (ரூ.) |
| 001 | மாநில சட்டமன்றம் | வருவாய் | 1,06,99,000 | *59,95,000* | 1,66,94,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | ... | ... |
| 002 | ஆளுநர் மற்றும் அமைச்சரவை | வருவாய் | 13,79,09,000 | *3,17,71,000* | 16,96,80,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | ... | ... |
| 003 | நீதி நிருவாகம் | வருவாய் | 169,15,76,000 | *82,01,50,000* | 251,17,26,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | ... | ... |
| 004 | ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை | வருவாய் | 37,81,09,000 | ... | 37,81,09,000 |
| | | மூலதனம் | 88,39,72,000 | ... | 88,39,72,000 |
| | | கடன் | ... | ... | ... |

| கோரிக்கை எண் | பணிகளும் நோக்கங்களும் | | கீழ்க்காணும் தொகைகளுக்கு மேற்படாமல் | | |
|---|---|---|---|---|---|
| | | | சட்டமன்றப் பேரவையால் வாக்களிக்கப்பட்டது | மாநிலத் தொகுநிதியத்திற்கு *சாட்டப்பட்டது* | மொத்தம் |
| (1) | (2) | | (3) | (4) | (5) |
| | | | (ரூ.) | (ரூ.) | (ரூ.) |
| 005 | வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை | **வருவாய்** | 1,16,000 | *36,24,000* | 37,40,000 |
| | | **மூலதனம்** | 66,72,59,000 | ... | 66,72,59,000 |
| | | **கடன்** | 240,45,30,000 | ... | 240,45,30,000 |
| 006 | கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை) | **வருவாய்** | 97,50,32,000 | *5,47,000* | 97,55,79,000 |
| | | **மூலதனம்** | 2,000 | ... | 2,000 |
| | | **கடன்** | ... | ... | ... |
| 007 | மீன்வளம் மற்றும் மீனவர் நலன் (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை) | **வருவாய்** | 162,84,99,000 | *1,74,000* | 162,86,73,000 |
| | | **மூலதனம்** | 5,000 | ... | 5,000 |
| | | **கடன்** | ... | ... | ... |
| 008 | பால்வளம் (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை) | **வருவாய்** | 219,13,12,000 | ... | 219,13,12,000 |
| | | **மூலதனம்** | ... | ... | ... |
| | | **கடன்** | 85,90,00,000 | ... | 85,90,00,000 |
| 009 | பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை | **வருவாய்** | 168,75,65,000 | ... | 168,75,65,000 |
| | | **மூலதனம்** | 134,18,41,000 | ... | 134,18,41,000 |
| | | **கடன்** | ... | ... | ... |
| 010 | வணிகவரிகள் (வணிகவரி மற்றும் பதிவுத் துறை) | **வருவாய்** | 75,21,39,000 | ... | 75,21,39,000 |
| | | **மூலதனம்** | ... | ... | ... |
| | | **கடன்** | ... | ... | ... |
| 011 | முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு (வணிகவரி மற்றும் பதிவுத் துறை) | **வருவாய்** | 90,60,000 | *11,39,000* | 1,01,99,000 |
| | | **மூலதனம்** | 15,76,58,000 | ... | 15,76,58,000 |
| | | **கடன்** | ... | ... | ... |
| 012 | கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) | **வருவாய்** | 668,30,68,000 | ... | 668,30,68,000 |
| | | **மூலதனம்** | 199,99,99,000 | ... | 199,99,99,000 |
| | | **கடன்** | ... | ... | ... |
| 013 | உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) | **வருவாய்** | 7,230,88,30,000 | ... | 7,230,88,30,000 |
| | | **மூலதனம்** | 132,01,24,000 | ... | 132,01,24,000 |
| | | **கடன்** | ... | ... | ... |
| 014 | எரிசக்தித் துறை | **வருவாய்** | 3,229,47,70,000 | ... | 3,229,47,70,000 |
| | | **மூலதனம்** | 1,649,99,99,000 | ... | 1,649,99,99,000 |
| | | **கடன்** | ... | ... | ... |
| 015 | சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றம் (சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை) | **வருவாய்** | 21,93,49,000 | ... | 21,93,49,000 |
| | | **மூலதனம்** | ... | ... | ... |
| | | **கடன்** | 1,000 | ... | 1,000 |
| 016 | நிதித் துறை | **வருவாய்** | 3,179,96,43,000 | *2,32,000* | 3,179,98,75,000 |
| | | **மூலதனம்** | 7,27,79,000 | ... | 7,27,79,000 |
| | | **கடன்** | 3,000 | ... | 3,000 |
| 017 | கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) | **வருவாய்** | 12,000 | ... | 12,000 |
| | | **மூலதனம்** | ... | ... | ... |
| | | **கடன்** | 1,57,70,000 | ... | 1,57,70,000 |
| 018 | கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) | **வருவாய்** | 17,67,77,000 | ... | 17,67,77,000 |
| | | **மூலதனம்** | 3,25,00,000 | ... | 3,25,00,000 |
| | | **கடன்** | ... | ... | ... |

| கோரிக்கை எண் | பணிகளும் நோக்கங்களும் | | கீழ்க்காணும் தொகைகளுக்கு மேற்படாமல் — சட்டமன்றப் பேரவையால் வாக்களிக்கப்பட்டது | மாநிலத் தொகுநிதியத்திற்கு *சாட்டப்பட்டது* | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | | (3) | (4) | (5) |
| | | | (ரூ.) | (ரூ.) | (ரூ.) |
| 019 | மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை | **வருவாய்** | 2,614,53,02,000 | *59,74,000* | 2,615,12,76,000 |
| | | **மூலதனம்** | 122,48,02,000 | ... | 122,48,02,000 |
| | | **கடன்** | ... | ... | ... |
| 020 | உயர்கல்வித் துறை | **வருவாய்** | 46,000 | ... | 46,000 |
| | | **மூலதனம்** | 222,79,72,000 | ... | 222,79,72,000 |
| | | **கடன்** | ... | ... | ... |
| 021 | நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை | **வருவாய்** | 13,000 | *3,65,000* | 3,78,000 |
| | | **மூலதனம்** | 23,000 | *20,85,40,000* | 20,85,63,000 |
| | | **கடன்** | ... | ... | ... |
| 022 | காவல் (உள்துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | **வருவாய்** | 70,000 | *3,77,99,000* | 3,78,69,000 |
| | | **மூலதனம்** | 78,72,000 | ... | 78,72,000 |
| | | **கடன்** | 11,47,48,000 | ... | 11,47,48,000 |
| 023 | தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள்துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | **வருவாய்** | 73,66,49,000 | *7,68,000* | 73,74,17,000 |
| | | **மூலதனம்** | 4,78,99,000 | ... | 4,78,99,000 |
| | | **கடன்** | ... | ... | ... |
| 024 | சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் (உள்துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | **வருவாய்** | 24,54,10,000 | ... | 24,54,10,000 |
| | | **மூலதனம்** | 41,42,80,000 | ... | 41,42,80,000 |
| | | **கடன்** | ... | ... | ... |
| 025 | இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள் – நிருவாகம் (உள்துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | **வருவாய்** | 158,01,45,000 | *24,000* | 158,01,69,000 |
| | | **மூலதனம்** | ... | ... | ... |
| | | **கடன்** | ... | ... | ... |
| 026 | வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை | **வருவாய்** | 1,534,02,29,000 | ... | 1,534,02,29,000 |
| | | **மூலதனம்** | 3,04,71,000 | ... | 3,04,71,000 |
| | | **கடன்** | 4,000 | ... | 4,000 |
| 027 | தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை | **வருவாய்** | 7,000 | ... | 7,000 |
| | | **மூலதனம்** | 274,74,39,000 | *1,38,000* | 274,75,77,000 |
| | | **கடன்** | 650,63,98,000 | ... | 650,63,98,000 |
| 028 | செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) | **வருவாய்** | 248,79,38,000 | ... | 248,79,38,000 |
| | | **மூலதனம்** | ... | ... | ... |
| | | **கடன்** | ... | ... | ... |
| 029 | சுற்றுலா – கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) | **வருவாய்** | 92,87,86,000 | ... | 92,87,86,000 |
| | | **மூலதனம்** | 62,37,01,000 | ... | 62,37,01,000 |
| | | **கடன்** | ... | ... | ... |
| 030 | எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) | **வருவாய்** | 5,18,59,000 | ... | 5,18,59,000 |
| | | **மூலதனம்** | 9,04,78,000 | ... | 9,04,78,000 |
| | | **கடன்** | ... | ... | ... |
| 031 | தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை | **வருவாய்** | 7,000 | ... | 7,000 |
| | | **மூலதனம்** | 39,06,49,000 | ... | 39,06,49,000 |
| | | **கடன்** | ... | ... | ... |
| 032 | தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை | **வருவாய்** | 75,91,71,000 | ... | 75,91,71,000 |
| | | **மூலதனம்** | 4,000 | ... | 4,000 |
| | | **கடன்** | ... | ... | ... |

| கோரிக்கை எண் (1) | பணிகளும் நோக்கங்களும் (2) | | கீழ்க்காணும் தொகைகளுக்கு மேற்படாமல் சட்டமன்றப் பேரவையால் வாக்களிக்கப்பட்டது (3) (ரூ.) | மாநிலத் தொகுநிதியத்திற்கு சாட்டப்பட்டது (4) (ரூ.) | மொத்தம் (5) (ரூ.) |
|---|---|---|---|---|---|
| 033 | சட்டத் துறை | வருவாய் | 53,97,71,000 | ... | 53,97,71,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | ... | ... |
| 034 | நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை | வருவாய் | 2,192,64,47,000 | ... | 2,192,64,47,000 |
| | | மூலதனம் | 15,000 | ... | 15,000 |
| | | கடன் | 200,85,25,000 | ... | 200,85,25,000 |
| 035 | மனிதவள மேலாண்மைத் துறை | வருவாய் | 19,24,57,000 | *20,53,06,000* | 39,77,63,000 |
| | | மூலதனம் | 9,98,98,000 | ... | 9,98,98,000 |
| | | கடன் | 88,00,000 | ... | 88,00,000 |
| 036 | திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை | வருவாய் | 15,49,64,000 | ... | 15,49,64,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | 10,00,000 | ... | 10,00,000 |
| 037 | மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள்துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | வருவாய் | 21,15,61,000 | ... | 21,15,61,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | ... | ... |
| 038 | பொதுத் துறை | வருவாய் | 233,63,72,000 | *52,37,000* | 234,16,09,000 |
| | | மூலதனம் | 117,42,47,000 | ... | 117,42,47,000 |
| | | கடன் | ... | ... | ... |
| 039 | கட்டடங்கள் (பொதுப் பணித் துறை) | வருவாய் | 45,74,50,000 | *27,45,000* | 46,01,95,000 |
| | | மூலதனம் | 18,000 | *61,73,000* | 61,91,000 |
| | | கடன் | ... | ... | ... |
| 040 | நீர்வளத் துறை | வருவாய் | 21,000 | *25,61,000* | 25,82,000 |
| | | மூலதனம் | 43,000 | *63,91,16,000* | 63,91,59,000 |
| | | கடன் | ... | ... | ... |
| 041 | வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை | வருவாய் | 71,000 | *36,82,000* | 37,53,000 |
| | | மூலதனம் | ... | *11,06,000* | 11,06,000 |
| | | கடன் | 88,00,000 | ... | 88,00,000 |
| 042 | ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை | வருவாய் | 4,018,02,27,000 | ... | 4,018,02,27,000 |
| | | மூலதனம் | 499,86,82,000 | ... | 499,86,82,000 |
| | | கடன் | 82,50,000 | ... | 82,50,000 |
| 043 | பள்ளிக் கல்வித் துறை | வருவாய் | 1,427,64,49,000 | *22,59,000* | 1,427,87,08,000 |
| | | மூலதனம் | 388,09,47,000 | ... | 388,09,47,000 |
| | | கடன் | ... | ... | ... |
| 044 | குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை | வருவாய் | 25,000 | ... | 25,000 |
| | | மூலதனம் | 1,03,00,000 | ... | 1,03,00,000 |
| | | கடன் | ... | ... | ... |
| 045 | சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை | வருவாய் | 1,32,000 | ... | 1,32,000 |
| | | மூலதனம் | 44,83,93,000 | ... | 44,83,93,000 |
| | | கடன் | ... | ... | ... |
| 046 | தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) | வருவாய் | 31,23,11,000 | ... | 31,23,11,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | ... | ... |

| கோரிக்கை எண் | பணிகளும் நோக்கங்களும் | | கீழ்க்காணும் தொகைகளுக்கு மேற்படாமல் சட்டமன்றப் பேரவையால் வாக்களிக்கப்பட்டது | மாநிலத் தொகுநிதியத்திற்கு *சாட்டப்பட்டது* | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | | (3) | (4) | (5) |
| | | | (ரூ.) | (ரூ.) | (ரூ.) |
| 047 | இந்து சமய அறநிலையத் துறை (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) | வருவாய் | 40,49,59,000 | *4,99,99,000* | 45,49,58,000 |
| | | மூலதனம் | 41,43,12,000 | ... | 41,43,12,000 |
| | | கடன் | ... | ... | ... |
| 048 | போக்குவரத்துத் துறை | வருவாய் | 119,74,99,000 | ... | 119,74,99,000 |
| | | மூலதனம் | 251,05,02,000 | ... | 251,05,02,000 |
| | | கடன் | 1,611,54,65,000 | ... | 1,611,54,65,000 |
| 049 | இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை | வருவாய் | 298,18,82,000 | ... | 298,18,82,000 |
| | | மூலதனம் | 29,39,21,000 | ... | 29,39,21,000 |
| | | கடன் | ... | ... | ... |
| 050 | ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் | வருவாய் | 17,000 | *1,000* | 18,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | ... | ... |
| 051 | இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு | வருவாய் | 1,634,57,60,000 | *32,000* | 1,634,57,92,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | ... | ... |
| 052 | மாற்றுத் திறனாளிகள் நலத் துறை | வருவாய் | 83,62,29,000 | ... | 83,62,29,000 |
| | | மூலதனம் | 40,31,000 | ... | 40,31,000 |
| | | கடன் | 50,00,000 | ... | 50,00,000 |
| 053 | சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை | வருவாய் | 4,885,49,03,000 | ... | 4,885,49,03,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | ... | ... |
| 054 | வனம் (சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை) | வருவாய் | 111,02,23,000 | *37,93,000* | 111,40,16,000 |
| | | மூலதனம் | 19,000 | ... | 19,000 |
| | | கடன் | ... | ... | ... |
| 055 | இயற்கை வளங்கள் துறை | வருவாய் | 90,24,90,000 | ... | 90,24,90,000 |
| | | மூலதனம் | 1,49,72,000 | ... | 1,49,72,000 |
| | | கடன் | ... | ... | ... |
| | கடன் செலவுகள் | வருவாய் | ... | *71,000* | 71,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | ... | ... |
| | பொதுக் கடன்–திருப்பிச் செலுத்துதல் | வருவாய் | ... | ... | ... |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | *165,99,06,000* | 165,99,06,000 |
| | **மொத்தம்** | **வருவாய்** | **35,444,23,17,000** | ***118,42,48,000*** | **35,562,65,65,000** |
| | | **மூலதனம்** | **4,463,20,28,000** | ***85,50,73,000*** | **4,548,71,01,000** |
| | | **கடன்** | **2,805,62,94,000** | ***165,99,06,000*** | **2,971,62,00,000** |
| | **பெருமொத்தம்** | | **42,713,06,39,000** | ***369,92,27,000*** | **43,082,98,66,000** |

**நோக்க–காரண விளக்கவுரை.**

இச்சட்ட முன்வடிவானது––

(a) 2025– ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1–ஆம் நாளில் தொடங்கிய நிதியாண்டிற்காக தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையால் அனுமதிக்கப்பட்ட துணை மானியங்களையும்;

(b) அந்த ஆண்டிற்காக, மாநிலத் தொகுநிதியத்தின்மீது சாட்டப்பட்ட துணைச் செலவினத்தையும்,

எதிர்கொள்வதற்குத் தேவைப்படும் தொகையை அந்நிதியத்திலிருந்து ஒதுக்கீடு செய்ய வகை செய்வதற்காக, அரசமைப்புச் சட்டத்தின் 204–ஆம் உறுப்பின் (1)– ஆம் கூறுடன் இணைத்துப் பொருள் கொள்ளப்பட வேண்டிய 205–ஆம் உறுப்பினையொட்டி அறிமுகப்படுத்தப்படுகின்றது.

**தங்கம் தென்னரசு,**
*நிதி மற்றும் சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர்.*

தலைமைச் செயலகம்,
சென்னை–9,
2026 பிப்ரவரி 20.

கி. சீனிவாசன்,
*முதன்மைச் செயலாளர்.*

2026–ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 20–ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்கக் காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130–ஆம் விதியின் கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.

## சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 13/2026

**2026–ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1–ஆம் நாளில் தொடங்குகிற நிதியாண்டின் ஒரு பகுதிக்கான பணிகளுக்காகவும், நோக்கங்களுக்காகவும், மாநிலத் தொகுநிதியத்திலிருந்து குறிப்பிட்டத் தொகைகளை எடுப்பதற்கு வகை செய்வதற்கானதொரு சட்டமுன்வடிவு.**

இந்தியக் குடியரசின் எழுபத்து ஏழாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:–

1. இந்தச் சட்டம், 2026–ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டம் என வழங்கப்பெறும். குறுந்தலைப்பு.

2. மாநில அரசு, 2026–ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1–ஆம் நாளில் தொடங்குகிற நிதியாண்டின் ஒரு பகுதிக்காக மாநிலத் தொகுநிதியத்திலிருந்து குறிப்பிட்ட சில தொகைகளை எடுத்தல்.

(a) இணைப்புப் பட்டியலின் (3)–ஆம் கலப்பத்தியில் (column) அறிவித்துள்ளவாறு, 2026–ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1–ஆம் நாளில் தொடங்குகிற நிதியாண்டின் ஒரு பகுதிக்காக தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையால் முன்னதாக அனுமதிக்கப்பட்ட மானியங்களையும்;

(b) இணைப்புப் பட்டியலின் (4)–ஆம் கலப்பத்தியில் (column) அறிவித்துள்ளவாறு, அந்த ஆண்டின் மேற்சொன்ன பகுதிக்காக மாநிலத் தொகுநிதியத்திற்குச் சாட்டப்பட்ட செலவினத்தையும்;

எதிர்கொள்வதற்கு தேவைப்படும் தொகையான மூன்று இலட்சத்து நாற்பத்து நான்காயிரத்து எழுநூற்று இருபத்து ஏழு கோடியே மூன்று இலட்சத்து ஐம்பத்து நான்காயிரம் ரூபாய்க்கு மேற்படாத தொகைகளை மாநிலத் தொகுநிதியத்திலிருந்து எடுக்கலாம்.

3 . தொகுநிதியத்திலிருந்து எடுக்கப்படுவதற்கு 2 – ஆம் பிரிவின் கீழ் அதிகாரமளிக்கப்பட்டுள்ள தொகைகளானவை, அந்த ஆண்டு தொடர்பாக இணைப்புப் பட்டியலில் தெரிவிக்கப்பட்டுள்ள பணிகளுக்காகவும், நோக்கங்களுக்காகவும் ஒதுக்கீடு செய்யப்படுதல் வேண்டும். நிதி ஒதுக்கம்

### இணைப்புப் பட்டியல்.
(2–ஆம் பிரிவைக் காண்க).

| கோரிக்கை எண் | பணிகளும் நோக்கங்களும் | | கீழ்க்காணும் தொகைகளுக்கு மேற்படாமல் — சட்டமன்றப் பேரவையால் வாக்களிக்கப்பட்டது | மாநிலத் தொகுநிதியத்திற்கு *சாட்டப்பட்டது* | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | | (3) | (4) | (5) |
| | | | (ரூ.) | (ரூ.) | (ரூ.) |
| 001 | மாநில சட்டமன்றம் | **வருவாய்** | 52,92,41,000 | *34,87,000* | 53,27,28,000 |
| | | **மூலதனம்** | 4,000 | ... | 4,000 |
| | | **கடன்** | 65,00,000 | ... | 65,00,000 |
| 002 | ஆளுநர் மற்றும் அமைச்சரவை | **வருவாய்** | 49,07,97,000 | *15,17,29,000* | 64,25,26,000 |
| | | **மூலதனம்** | ... | *4,000* | 4,000 |
| | | **கடன்** | ... | ... | ... |

| கோரிக்கை எண் (1) | பணிகளும் நோக்கங்களும் (2) | | கீழ்க்காணும் தொகைகளுக்கு மேற்படாமல் சட்டமன்றப் பேரவையால் வாக்களிக்கப்பட்டது (3) (ரூ.) | மாநிலத் தொகுநிதியத்திற்கு *சாட்டப்பட்டது* (4) (ரூ.) | மொத்தம் (5) (ரூ.) |
|---|---|---|---|---|---|
| 003 | நீதி நிருவாகம் | **வருவாய்** | 1,304,22,42,000 | *291,24,99,000* | 1,595,47,41,000 |
| | | **மூலதனம்** | 5,000 | *1,000* | 6,000 |
| | | **கடன்** | ... | ... | ... |
| 004 | ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை | **வருவாய்** | 1,932,95,60,000 | *13,00,34,000* | 1,945,95,94,000 |
| | | **மூலதனம்** | 610,73,32,000 | ... | 610,73,32,000 |
| | | **கடன்** | 65,00,000 | ... | 65,00,000 |
| 005 | வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை | **வருவாய்** | 9,914,76,27,000 | *3,000* | 9,914,76,30,000 |
| | | **மூலதனம்** | 125,52,62,000 | ... | 125,52,62,000 |
| | | **கடன்** | 1,30,01,000 | ... | 1,30,01,000 |
| 006 | கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை) | **வருவாய்** | 1,014,70,57,000 | *5,000* | 1,014,70,62,000 |
| | | **மூலதனம்** | 32,25,76,000 | ... | 32,25,76,000 |
| | | **கடன்** | 65,00,000 | ... | 65,00,000 |
| 007 | மீன்வளம் மற்றும் மீனவர் நலன் (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை) | **வருவாய்** | 501,51,58,000 | *1,000* | 501,51,59,000 |
| | | **மூலதனம்** | 455,74,12,000 | ... | 455,74,12,000 |
| | | **கடன்** | ... | ... | ... |
| 008 | பால்வளம் (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை) | **வருவாய்** | 162,69,97,000 | *1,000* | 162,69,98,000 |
| | | **மூலதனம்** | 390,00,06,000 | ... | 390,00,06,000 |
| | | **கடன்** | 325,00,01,000 | ... | 325,00,01,000 |
| 009 | பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை | **வருவாய்** | 907,92,34,000 | *1,95,04,000* | 909,87,38,000 |
| | | **மூலதனம்** | 151,87,05,000 | ... | 151,87,05,000 |
| | | **கடன்** | 32,50,000 | ... | 32,50,000 |
| 010 | வணிகவரிகள் (வணிகவரி மற்றும் பதிவுத் துறை) | **வருவாய்** | 415,24,52,000 | *2,000* | 415,24,54,000 |
| | | **மூலதனம்** | 4,000 | ... | 4,000 |
| | | **கடன்** | 65,00,000 | ... | 65,00,000 |
| 011 | முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு (வணிகவரி மற்றும் பதிவுத் துறை) | **வருவாய்** | 305,54,53,000 | *1,000* | 305,54,54,000 |
| | | **மூலதனம்** | 5,000 | ... | 5,000 |
| | | **கடன்** | ... | ... | ... |
| 012 | கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) | **வருவாய்** | 1,260,98,30,000 | *2,000* | 1,260,98,32,000 |
| | | **மூலதனம்** | 8,000 | ... | 8,000 |
| | | **கடன்** | 1,30,00,000 | ... | 1,30,00,000 |
| 013 | உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) | **வருவாய்** | 11,860,92,36,000 | *2,000* | 11,860,92,38,000 |
| | | **மூலதனம்** | 240,00,06,000 | ... | 240,00,06,000 |
| | | **கடன்** | ... | ... | ... |
| 014 | எரிசக்தித் துறை | **வருவாய்** | 6,159,18,62,000 | *1,000* | 6,159,18,63,000 |
| | | **மூலதனம்** | 4,034,24,06,000 | ... | 4,034,24,06,000 |
| | | **கடன்** | 4,279,08,02,000 | ... | 4,279,08,02,000 |
| 015 | சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றம் (சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை) | **வருவாய்** | 66,58,94,000 | *1,000* | 66,58,95,000 |
| | | **மூலதனம்** | 46,80,05,000 | ... | 46,80,05,000 |
| | | **கடன்** | 3,25,00,000 | ... | 3,25,00,000 |
| 016 | நிதித் துறை | **வருவாய்** | 3,293,93,56,000 | *12,000* | 3,293,93,68,000 |
| | | **மூலதனம்** | 9,25,06,000 | ... | 9,25,06,000 |
| | | **கடன்** | 147,27,17,000 | ... | 147,27,17,000 |

| கோரிக்கை எண் | பணிகளும் நோக்கங்களும் | | கீழ்க்காணும் தொகைகளுக்கு மேற்படாமல் சட்டமன்றப் பேரவையால் வாக்களிக்கப்பட்டது | மாநிலத் தொகுநிதியத்திற்கு *சாட்டப்பட்டது* | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | | (3) | (4) | (5) |
| | | | (ரூ.) | (ரூ.) | (ரூ.) |
| 017 | கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) | **வருவாய்** | 1,102,07,58,000 | *1,000* | 1,102,07,59,000 |
| | | **மூலதனம்** | 5,000 | ... | 5,000 |
| | | **கடன்** | 32,53,000 | ... | 32,53,000 |
| 018 | கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) | **வருவாய்** | 160,73,69,000 | *1,000* | 160,73,70,000 |
| | | **மூலதனம்** | 4,000 | ... | 4,000 |
| | | **கடன்** | 1,000 | ... | 1,000 |
| 019 | மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை | **வருவாய்** | 13,801,51,27,000 | *34,30,000* | 13,801,85,57,000 |
| | | **மூலதனம்** | 556,20,36,000 | *1,000* | 556,20,37,000 |
| | | **கடன்** | 65,00,000 | ... | 65,00,000 |
| 020 | உயர்கல்வித் துறை | **வருவாய்** | 5,099,82,61,000 | *1,000* | 5,099,82,62,000 |
| | | **மூலதனம்** | 428,05,77,000 | *1,000* | 428,05,78,000 |
| | | **கடன்** | 32,50,000 | ... | 32,50,000 |
| 021 | நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை | **வருவாய்** | 1,482,53,65,000 | *1,000* | 1,482,53,66,000 |
| | | **மூலதனம்** | 12,252,72,42,000 | *2,000* | 12,252,72,44,000 |
| | | **கடன்** | 32,50,000 | ... | 32,50,000 |
| 022 | காவல் (உள்துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | **வருவாய்** | 8,579,79,26,000 | *4,03,06,000* | 8,583,82,32,000 |
| | | **மூலதனம்** | 229,80,18,000 | ... | 229,80,18,000 |
| | | **கடன்** | 15,27,51,000 | ... | 15,27,51,000 |
| 023 | தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள்துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | **வருவாய்** | 378,89,36,000 | *1,000* | 378,89,37,000 |
| | | **மூலதனம்** | 54,98,08,000 | ... | 54,98,08,000 |
| | | **கடன்** | ... | ... | ... |
| 024 | சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் (உள்துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | **வருவாய்** | 364,50,93,000 | *3,26,000* | 364,54,19,000 |
| | | **மூலதனம்** | 195,00,05,000 | ... | 195,00,05,000 |
| | | **கடன்** | ... | ... | ... |
| 025 | இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள் – நிருவாகம் (உள்துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | **வருவாய்** | 551,40,49,000 | *1,000* | 551,40,50,000 |
| | | **மூலதனம்** | 5,000 | ... | 5,000 |
| | | **கடன்** | ... | ... | ... |
| 026 | வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை | **வருவாய்** | 1,487,61,50,000 | *1,000* | 1,487,61,51,000 |
| | | **மூலதனம்** | 7,000 | ... | 7,000 |
| | | **கடன்** | 3,417,70,02,000 | ... | 3,417,70,02,000 |
| 027 | தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை | **வருவாய்** | 1,424,93,99,000 | *1,000* | 1,424,94,00,000 |
| | | **மூலதனம்** | 928,77,68,000 | *1,000* | 928,77,69,000 |
| | | **கடன்** | 429,33,75,000 | ... | 429,33,75,000 |
| 028 | செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) | **வருவாய்** | 165,88,99,000 | *1,000* | 165,89,00,000 |
| | | **மூலதனம்** | 5,000 | ... | 5,000 |
| | | **கடன்** | ... | ... | ... |
| 029 | சுற்றுலா – கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) | **வருவாய்** | 160,91,23,000 | *5,000* | 160,91,28,000 |
| | | **மூலதனம்** | 208,97,33,000 | ... | 208,97,33,000 |
| | | **கடன்** | 1,30,00,000 | ... | 1,30,00,000 |
| 030 | எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) | **வருவாய்** | 119,17,95,000 | *5,88,000* | 119,23,83,000 |
| | | **மூலதனம்** | 6,000 | ... | 6,000 |
| | | **கடன்** | ... | ... | ... |

| கோரிக்கை எண் | பணிகளும் நோக்கங்களும் | | கீழ்க்காணும் தொகைகளுக்கு மேற்படாமல் | | |
|---|---|---|---|---|---|
| | | | சட்டமன்றப் பேரவையால் வாக்களிக்கப்பட்டது | மாநிலத் தொகுநிதியத்திற்கு *சாட்டப்பட்டது* | மொத்தம் |
| (1) | (2) | | (3) | (4) | (5) |
| | | | (ரூ.) | (ரூ.) | (ரூ.) |
| 031 | தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை | **வருவாய்** | 71,26,91,000 | *1,000* | 71,26,92,000 |
| | | **மூலதனம்** | 70,89,26,000 | ... | 70,89,26,000 |
| | | **கடன்** | 32,50,000 | ... | 32,50,000 |
| 032 | தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை | **வருவாய்** | 1,165,39,26,000 | *3,000* | 1,165,39,29,000 |
| | | **மூலதனம்** | 130,86,15,000 | *1,000* | 130,86,16,000 |
| | | **கடன்** | 1,43,00,000 | ... | 1,43,00,000 |
| 033 | சட்டத் துறை | **வருவாய்** | 79,73,30,000 | ... | 79,73,30,000 |
| | | **மூலதனம்** | 7,000 | ... | 7,000 |
| | | **கடன்** | 1,30,00,000 | ... | 1,30,00,000 |
| 034 | நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை | **வருவாய்** | 10,439,49,43,000 | *2,000* | 10,439,49,45,000 |
| | | **மூலதனம்** | 6,981,30,84,000 | ... | 6,981,30,84,000 |
| | | **கடன்** | 926,54,26,000 | ... | 926,54,26,000 |
| 035 | மனிதவள மேலாண்மைத் துறை | **வருவாய்** | 129,35,01,000 | *107,79,35,000* | 237,14,36,000 |
| | | **மூலதனம்** | 34,13,21,000 | ... | 34,13,21,000 |
| | | **கடன்** | 1,95,00,000 | ... | 1,95,00,000 |
| 036 | திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை | **வருவாய்** | 236,94,66,000 | *5,000* | 236,94,71,000 |
| | | **மூலதனம்** | 64,51,30,000 | ... | 64,51,30,000 |
| | | **கடன்** | 65,00,000 | ... | 65,00,000 |
| 037 | மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள்துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | **வருவாய்** | 174,68,58,000 | *1,000* | 174,68,59,000 |
| | | **மூலதனம்** | 3,000 | ... | 3,000 |
| | | **கடன்** | ... | ... | ... |
| 038 | பொதுத் துறை | **வருவாய்** | 1,623,04,84,000 | *5,24,47,000* | 1,628,29,31,000 |
| | | **மூலதனம்** | 169,43,71,000 | ... | 169,43,71,000 |
| | | **கடன்** | 9,73,75,000 | ... | 9,73,75,000 |
| 039 | கட்டடங்கள் (பொதுப் பணித் துறை) | **வருவாய்** | 324,10,61,000 | *1,000* | 324,10,62,000 |
| | | **மூலதனம்** | 776,41,88,000 | ... | 776,41,88,000 |
| | | **கடன்** | 52,00,000 | ... | 52,00,000 |
| 040 | நீர்வளத் துறை | **வருவாய்** | 3,253,13,68,000 | *1,000* | 3,253,13,69,000 |
| | | **மூலதனம்** | 3,295,34,35,000 | *1,000* | 3,295,34,36,000 |
| | | **கடன்** | 65,00,000 | ... | 65,00,000 |
| 041 | வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை | **வருவாய்** | 5,707,70,36,000 | *19,53,000* | 5,707,89,89,000 |
| | | **மூலதனம்** | 5,000 | *1,000* | 6,000 |
| | | **கடன்** | 97,50,000 | ... | 97,50,000 |
| 042 | ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை | **வருவாய்** | 15,096,33,62,000 | *3,000* | 15,096,33,65,000 |
| | | **மூலதனம்** | 3,549,39,53,000 | ... | 3,549,39,53,000 |
| | | **கடன்** | 65,00,000 | ... | 65,00,000 |
| 043 | பள்ளிக் கல்வித் துறை | **வருவாய்** | 30,824,35,54,000 | *8,000* | 30,824,35,62,000 |
| | | **மூலதனம்** | 721,69,01,000 | *1,000* | 721,69,02,000 |
| | | **கடன்** | 78,00,000 | ... | 78,00,000 |
| 044 | குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை | **வருவாய்** | 1,262,51,78,000 | *1,000* | 1,262,51,79,000 |
| | | **மூலதனம்** | 6,000 | ... | 6,000 |
| | | **கடன்** | 32,51,000 | ... | 32,51,000 |

| கோரிக்கை எண் (1) | பணிகளும் நோக்கங்களும் (2) | | கீழ்க்காணும் தொகைகளுக்கு மேற்படாமல் சட்டமன்றப் பேரவையால் வாக்களிக்கப்பட்டது (3) (ரூ.) | மாநிலத் தொகுநிதியத்திற்கு *சாட்டப்பட்டது* (4) (ரூ.) | மொத்தம் (5) (ரூ.) |
|---|---|---|---|---|---|
| 045 | சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை | வருவாய் | 5,595,73,80,000 | ... | 5,595,73,80,000 |
| | | மூலதனம் | 15,21,12,000 | ... | 15,21,12,000 |
| | | கடன் | 65,00,000 | ... | 65,00,000 |
| 046 | தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) | வருவாய் | 93,42,30,000 | *2,000* | 93,42,32,000 |
| | | மூலதனம் | 4,000 | ... | 4,000 |
| | | கடன் | 65,00,000 | ... | 65,00,000 |
| 047 | இந்து சமய அறநிலையத் துறை (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) | வருவாய் | 507,13,80,000 | *11,70,00,000* | 518,83,80,000 |
| | | மூலதனம் | 16,28,65,000 | ... | 16,28,65,000 |
| | | கடன் | ... | ... | ... |
| 048 | போக்குவரத்துத் துறை | வருவாய் | 5,637,81,76,000 | *1,000* | 5,637,81,77,000 |
| | | மூலதனம் | 2,240,13,45,000 | ... | 2,240,13,45,000 |
| | | கடன் | 611,99,51,000 | ... | 611,99,51,000 |
| 049 | இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை | வருவாய் | 400,42,74,000 | *1,000* | 400,42,75,000 |
| | | மூலதனம் | 66,03,62,000 | ... | 66,03,62,000 |
| | | கடன் | 32,50,000 | ... | 32,50,000 |
| 050 | ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் | வருவாய் | 39,996,19,54,000 | *43,58,27,000* | 40,039,77,81,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | ... | ... |
| 051 | இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு | வருவாய் | 1,331,21,25,000 | *1,000* | 1,331,21,26,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | ... | ... |
| 052 | மாற்றுத் திறனாளிகள் நலத் துறை | வருவாய் | 954,25,34,000 | *1,000* | 954,25,35,000 |
| | | மூலதனம் | 2,17,35,000 | ... | 2,17,35,000 |
| | | கடன் | 1,000 | ... | 1,000 |
| 053 | சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை | வருவாய் | 11,107,35,84,000 | ... | 11,107,35,84,000 |
| | | மூலதனம் | 4,000 | ... | 4,000 |
| | | கடன் | ... | ... | ... |
| 054 | வனம் (சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை) | வருவாய் | 513,86,58,000 | *1,000* | 513,86,59,000 |
| | | மூலதனம் | 511,90,60,000 | ... | 511,90,60,000 |
| | | கடன் | 1,000 | ... | 1,000 |
| 055 | இயற்கை வளங்கள் துறை | வருவாய் | 85,44,54,000 | *1,000* | 85,44,55,000 |
| | | மூலதனம் | 5,000 | ... | 5,000 |
| | | கடன் | 32,50,000 | ... | 32,50,000 |
| | கடன் செலவுகள் | வருவாய் | ... | *49,905,43,62,000* | 49,905,43,62,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | ... | ... |
| | பொதுக் கடன்–திருப்பிச் செலுத்துதல் | வருவாய் | ... | ... | ... |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | *33,851,07,25,000* | 33,851,07,25,000 |
| | **மொத்தம்** | வருவாய் | **210,693,97,53,000** | ***50,400,15,06,000*** | **261,094,12,59,000** |
| | | மூலதனம் | **39,596,68,98,000** | ***14,000*** | **39,596,69,12,000** |
| | | கடன் | **10,185,14,58,000** | ***33,851,07,25,000*** | **44,036,21,83,000** |
| | **பெருமொத்தம்** | | **260,475,81,09,000** | ***84,251,22,45,000*** | **344,727,03,54,000** |

**நோக்க—காரண விளக்கவுரை.**

இச்சட்ட முன்வடிவானது—

(a) மாநிலத்தின் மதிப்பீட்டுச் செலவினத்தைப் பொறுத்த அளவில், 2026– ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1 –ஆம் நாளில் தொடங்குகிற நிதியாண்டின் ஒரு பகுதிக்காக தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையால் முன்னதாக அனுமதிக்கப்பட்ட மானியங்களை எதிர்கொள்வதற்கும்,

(b) அந்த ஆண்டின், மேற்சொன்ன பகுதிக்காக தொகு நிதியத்தின் மீது சாட்டப்பட்ட செலவினத்தை எதிர்கொள்வதற்கும் மேற்சொன்ன தொகைகளை ஒதுக்கீடு செய்வதற்கும்,

தேவைப்படும் குறிப்பிட்ட தொகைகளை மாநிலத் தொகுநிதியத்திலிருந்து எடுப்பதற்கு வகை செய்வதற்காக, அரசமைப்புச் சட்டத்தின் 206–ஆம் உறுப்பினையொட்டிஅறிமுகப்படுத்தப்படுகின்றது.

**தங்கம் தென்னரசு,**
*நிதி மற்றும் சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர்.*

தலைமைச் செயலகம்,
சென்னை—9,
2026 பிப்ரவரி 20.

கி. சீனிவாசன்,
*முதன்மைச் செயலாளர்.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை ஆணையரால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.